**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி**
**முன்னிலை:திரு.N.விஸ்வநாத், B.A.,B.L.,M.B.A.,L.L.M.**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கடலாடி.**

**2024 ம் ஆண்டு மார்ச் திங்கள் 15 ம் நாள் வெள்ளிக்கிழமை**

**I.A.No.01/2024**
**in**
**O.S.No.21/2019**

சற்குணம் வகையறா ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

கந்தசாமி வகையறா ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 01.03.2024 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.அரிச்சந்திரன் அவர்கள் ஆஜராகியும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கில் மைனராக சேர்த்த 12 ம் பிரதிவாதியை மேஜர் என Declare செய்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**

மனுதாரர்கள் தனது மனுவில் வழக்கானது வாதத்திற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், வழக்கு தாக்கல் செய்த பிறகு 4 ம் பிரதிவாதியான லோகாம்பாள் காலமாகி விட்டதால் 11 முதல் 13 பிரதிவாதிகளாக 2018 ம் ஆண்டில் பார்ட்டியாக சேர்த்ததாகவும், அப்போது 12, 13 பிரதிவாதிகளான மைனர்களுக்கு வயதுகள் முறையே 10, 16 என்றும், 13 ம் பிரதிவாதியை பார்ட்டியாக சேர்த்து தற்போதைய நிலையில் 5 வருடங்கள் கடந்து விட்டதால் 12 ம் பிரதிவாதிக்கு 21 வயது ஆகிவிட்டது என்றும், எனவே 12 ம் பிரதிவாதிக்கு கார்டியனை நீக்கிவிட்டு மேஜர் என declare செய்யக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவினை செலவுத்தொகையுடன் அனுமதிக்கக்கோரி மேற்குறிப்பு செய்துள்ளார்.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கின் 4ம் வாதி. இறந்துபோன 4ம் பிரதிவாதியை வாரிசுகளாக சேர்க்கப்பட்ட 12, 13 பிரதிவாதிகள் தற்சமயம் மேஜராகி விட்டதால் அவர்களுக்கான கார்டியனை நீக்கி விட்டு மேஜர் என விளம்புகை செய்து உத்தரவிடக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவை செலவுத்தொகையுடன் அனுமதிக்ககோரி மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. வழக்கின் தரப்பினர்களாக சேர்க்கப்பட்ட 12, 13 பிரதிவாதிகளுக்கு 18 வயதை கடந்த பின்னர் மேஜர் என விளம்புகை செய்து உத்தரவிட வேண்டியது அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது.

எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 15.03.2024 இன்று அவையறிய பகரப்பட்டது.

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.15 16:42:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

N VISWANATH
Digitally signed by N VISWANATH
Date: 2024.03.15 16:42:19 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2024
in
O.S.No.21/2019

Date:15.03.2024
IA order